பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 05 | வியாழக்கிழமை | 18.04.2024 | கதிர் 162

# இறையாண்மை பத்திர மறுசீரமைப்பில் இலங்கைக்கு சாதகமான முடிவு இல்லை

## நிதி அமைச்சு அறிவிப்பு

இலங்கை திருப்பிச் செலுத்தாத இறையாண்மை பத்திர மறுசீரமைப்பு செயல்முறையில் இலங்கைக்குசாதகமானமுடிவுகள்எட்டப்படவில்லை என்று தெரிவித்து, இதுவரைஅடைந்துள்ளமுன்னேற்றத்தை தெளிவுபடுத்தி நிதி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தின்செயல்திறன்அடிப்படையில் இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைக்ககடன்வழங்குநர்கள் முன்மொழிந்துள்ளனர்என்றுஅந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும்,இலங்கைதரப்பினர் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் நிலை மோசமாகிக் கொண்டிருக்கின்றது. கட்சிக்குள் நிரந்தரமான அணிப் பிளவு ஏற்பட்டிருக்கின்றது என்பதை அதன் தலைவர் சிறீதரன் முதற்றடவையாக வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். அதுமட்டுமல்ல வழக்குப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்தான் என்று மறைமுகமாகச் சாடவும் செய்திருக்கின்றார். தேர்தலில் தான் தோற்றிருந்தால், வென்றவர் தனக்கு விரும்பிய வகையில் கட்சியின் நிர்வாகத்தைக் கட்டமைத்து முன்கொண்டு செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கித் தான் ஒதுங்கியிருப்பார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

புலம்பெயர் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். கட்சியின்பொதுக்குழுக்கூட்டத்திற்குப் பின்னர்அவர்வழங்கியிருக்கக்கூடிய இந்தநீண்டநேர்காணலில்சுமந்திரன் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஏற்ற விதத்தில் கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றுக்கு பதிலளித்த ☞ 2

## தெவரப் பெருமவின் இறுதிக் கிரியைகள் ஏப்ரல் 20 நடக்கும்

முன்னாள் இராஜாங்க அமைச்சர், காலஞ்சென்ற பாலித்த தெவரப்பெருமவின் பூதவுடல் நேற்று இரவு மத்துகமயில் உள்ள அன்னாரது வீட்டிற்கு கொண்டுவரப்பட்டது. ஏப்ரல் 20 நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பாலித்த தெவரப்பெரும, மத்துகம - நவத்துடுவ பிரதேசத்திலுள்ளஅவருக்குசொந்தமான தோட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். அவரது திடீர் மறைவை அறிந்த பெருந்திரளானவர்கள், நேற்று நாகொடை வைத்தியசாலையில் ஒன்றுகூடினர்.

மத்துகம மேலதிக நீதவான் மற்றும் களுத்துறை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர், சம்பவம் இடம்பெற்ற இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

மின்சாரம் தாக்கியமையால், உடலின் உள் உறுப்புகள் ☞ 2

## முன்னாள் போராளியான ஆனந்தவர்ணனை உடன் விடுவிப்பதுடன் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்

### முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் வலியுறுத்து



பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ், புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்று ☞ 2

## கடன்மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுக்களில் எதிர்க் கட்சியின் கருத்துக்கும் இடம்வேண்டும்

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. வலியுறுத்து

கடன்மறுசீரமைப்பை மீண்டும் ஒருமுறை மேற்கொள்ள இலங்கைக்கு வாய்ப்புக் கிடைக்காது. எனவே அது தொடர்பான பேச்சுக்களில் எதிர்க் கட்சியின் கருத்துக்களுக்கும் இடமளிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சிதலைவர்அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச கடன் வழங்குநர்களுடனான பேச்சு நிறைவடைந்துள்ளதாக ஆளும் தரப்பு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. ஏப்ரலுக்குள் பேச்சுக்களை நிறைவுசெய்து,12.7பில்லியன் டொலர் கடன் தொகையை மறுசீரமைப்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதே ஆளும்தரப்பின்எதிர்பார்ப்பாக இருந்தது.

அரசியலுக்கு அப்பால் சென்று நாம் இவ்விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும். யார் பேச்சுக்களை முன்னெடுத்தாலும், அவர்கள் அதை இலங்கை மக்களுக்காகவே செய்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். முன்னெடுக்கப்படும் இந்த பேச்சுக்களுக்கமைய 2040ஆம்ஆண்டுவரைநாம் செயற்பட வேண்டும். ☞ 8

## கெஹலியவின் அமைச்சு வாகனங்கள் அவரது குடும்பத்தினரின் பயன்பாட்டில்

### அவை மீளப் பெறப்படாதது குறித்து அமைச்சு அதிகாரி கேள்வி

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டு சுமார் மூன்று மாதங்களாகும் நிலையில், அவர்அமைச்சராக இருந்தபோது வழங்கப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்ச்சியாக அவரது குடும்ப உறுப்பினர்களால் பயன்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர்குற்றம்சுமத்தியுள்ளார்.

அத்துடன், விஜேராம மாவத்தையில் அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் ஏன் இதுவரை கையகப்படுத் தப்படவில்லை எனவும் அந்த அதிகாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசஉத்தியோகத்தர் ஒருவர்விளக்கமறியலில் வைக்கப்பட்டால், அவர் பெற்றிருந்த அனைத்துச் சலுகைகளும் உடனடியாக இரத்துச் செய்யப்படும்,ஆனால்,கெஹலிய ரம்புக்வெலவுக்கு ஏன் விசேட கவனம் செலுத்தப்படுகிறதுஎன்று அந்த அதிகாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெல்லவின் ☞ 2

## தமிழ்ப் பொது வேட்பாளருக்குள் எல்லாத் தெரிவுகளும் அடக்கம்

### புது விளக்கம் தருகிறார் விக்னேஸ்வரன்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குள்தேர்தல் புறக்கணிப்பும் சிங்கள வேட்பாளருக்கான வாக்களிப்பும் அடங்கியிருக்கின்றன என்று விளக்கமளித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், நாடாளுமன்றஉறுப்பினர் விக்னேஸ்வரன்.

மாதாந்தக் கேள்வி பதில் என்ற தலைப்பில் (மேலதிக கேள்வி) அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கேள்வி :- நீங்கள் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டும் என்று கூறப்போய் அது பூதாகாரமாகத் தமிழ் மக்களிடையே பல முரண்பாடுகளைத் தோற்றுவித்திருக்கின்றதே! அதை எப்படிப்பார்க்கின்றீர்கள்?

பதில் :- (சிரிக்கிறார்) Muchadoaboutnothing என்று ஷேக்ஸ்பியரின் (Shakespeare) நாடகம் ஒன்றுண்டு. இல்லாத முரண்பாடுகள் பற்றிய ஆரவாரம் என்று இதனைக் கூறலாம். எனதருமைத் தமிழ் மக்களுக்கு ஒன்றைக் கூறவிரும்புகின்றேன்.

ஜனாதிபதிதேர்தலில் ஒருபொதுவேட்பாளரை நிறுத்துவது என்பது முரண்படுவதாகக் கூறப்படும் மற்றைய சகலகருத்துக்களையும் அது தன்னுள் அடக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஆதிசங்கரரின் குருவின் குருவாகிய ☞ 8

## சுட்டெரிக்கும் வெயிலில் இருந்து தப்ப

# பனைமட்டைகளைத் தலைக்கு பிடித்தபடி கல்முனை தமிழர்கள் தொடர் போராட்டம்



சுட்டெரிக்கும் வெயிலின்கொடூரத்திலும்நிழல் கூடாரம் அமைக்கத் தடை விதித்த நிலையில் கல்முனைவடக்குபிரதேச செயலகதீர்விற்கானதமது கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்கள் தம்மைக் காக்க பனை மட்டைகளைத் தாங்கி போராடி வருகின்றனர்.

கல்முனை பிரதேச செயலகத்தின் முன்பாக மார்ச் மாதம் திங்கட்கிழமை (25) பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராடி வருகின்றனர். அத்துடன் கல்முனை வடக்கு பிரதேசசெயலகநிர்வாகச் செயற்பாடுகளுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும் அத்துமீறலுக்குமான குறித்த எதிர்ப்புப் போராட்டம் தொடர்ச்சியாக குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாகஉள்ளவீதியின் இருமருங்கிலும் காலை மாலை இரவு என மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்தபோதிலும்ஒரு சில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள்வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக ☞ 8

## தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டும்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாமல் தொடர்ந்தும் ரணில் பதவியில் இருப்பதற்கான வியூகங்கள் வகுக்கப்படுகின்றவா என்ற சந்தேகம் மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடத்தில் ஏற்பட்டிருக்கின்றது. இருப்பினும் தேர்தல்கள் உரிய காலத்தில்நடத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார். நேற்றுயாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசமைப்பின்படி எதிர்வரும் செப்ரெம்பர் அல்லதுஒக்டோபர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி விசாரிக்க நீதிமன்ற அதிகாரங்களுடன் ஆணைக்குழு

## தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் நிச்சயம் என்று அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இனங்களுக்கு இடையே முரண்பாடுகளை உருவாக்கி இனக் கலவரங்களை ஏற்படுத்தி, உயிர் மற்றும் உடைமைச் சேதங்களை ஏற்படுத்தி, குறுகிய அரசியல் இலக்கை அடைவதற்காக குழுவொன்றால் மேற்கொள்ளப்பட்ட சதி என்று அறிவித்துள்ள தேசிய மக்கள் சக்தி, முழுமையான நீதிமன்ற அதிகாரத்துடன், விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை உருவாக்கி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் பிரதம செயலாளர் மருத்துவர் நிஹால் அபேசிங்கவின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்ட ஊடக அறிவிப்பில் இந்த அறிவிப்பு உள்ளது,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி மற்றும் தாக்குதலை திட்டமிட்டவர்களை சட்டத்திற்கு முன்னால் நிறுத்துவதே தேசிய மக்கள் சக்தி தலைமையிலான ஆட்சியின் முதன்மை நடவடிக்கையாகும்

ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கவும் பின்வாங்கப்போவதில்லை" என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அறநெறி ஆசிரியர்கள் மூதூரில் ஆர்ப்பாட்டம்




மூதூர் பிரதேச தமிழ் அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மூதூர் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலக இந்துக் கலாச்சார உத்தியோகத்தர் தம்மை தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டும் அறநெறி ஆசிரியர்கள், அதனைக் கண்டித்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூரில் இயங்கிய 5 அறநெறிப் பாடசாலைகளை மூதூர் பிரதேச இந்துகுருமார் சங்கத்தின்கீழ் பதிவு செய்வதற்கு சென்றபோது தாம் அவமானப்படுத்தப்பட்டனர் என்று ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள், காலாசார அலுவலர் தம்மிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று எழுதப்பட்டது உடபட வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்தியிருந்தனர். 5 அறநெறிப் பாடசாலைகளையும் பதிவு செய், அறநெறி பாடசாலை ஆசிரியைகளை அவமதிக்காதே, கலாச்சார உத்தியோகத்தரை வெளியேற்று உள்ளிட்ட வாசகங்கள் அதில் எழுதப்பட்டிருந்தன.

இதனையடுத்து ஆர்ப்பாட்ட இடத்திற்கு மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக், திருகோணமலை மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் லக்குமிதேவி சிறிதரன் ஆகியோர் வருகை தந்து ஆசிரியர்களுடன் பேசினர். அவர்களிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர். பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய திருகோணமலை மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் லக்குமிதேவி சிறிதரன்,

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைக்கு அமைவாக 5 அறநெறி பாடசாலைகளையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம், அரச சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் இந்த பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

அத்தோடு இப்பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி பிரதேச செயலாளரின் தலைமையில் கூட்டம் ஒன்று இடம் பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

### இனி இது .....

சிறீதரன், தனக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் இடையில் மனதளவில் இடைவெளி விரிவாகிக்கொண்டே செல்கின்றது என்று தெரிவித்தார்.

ஜனவரி 27இல் நடந்த கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்திற்கு முன்னதான கூட்டத்தில் சுமந்திரன் பரிந்துரைத்தவர்கள் எல்லோரையும் மத்திய குழுவிற்குத் தான் தெரிவு செய்திருந்தார் என்றும் தேர்தல் முடிந்த பின்னர் கட்சிக்குள் தனித் தனி அணிகள் இருக்கக்கூடாது என்ற நல்ல நோக்கத்தில் தான் அப்படி நடந்துகொண்டார் என்றும் ஆனாலும், தான் தலைவராகப் பொறுப்பேற்கக்கூடாது என்கிற சிலரின் சதி காரணமாகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்றும் தெரிவித்தார். நேர்காணலின் இடையே பல தடவைகள் அவர் இந்த வழக்குகள் சிலரின் பின்னணியிலேயே தாக்கல் செய்யப்பட்டன என்றும் சாடினார்.

பெப்ரவரி 4 வவுனியாவில் தானும் சுமந்திரனும் வைத்தியர் சத்தியலிங்கமும் சந்தித்துப் பேசியபோது, செயலாளர் பதவியை குகதாசனுக்கு ஒரு வருடம் சிறீநேசனுக்கு ஒரு வருடம் என்ற அடிப்படையில் வழங்குவதற்கும் உப செயலாளராக இருவரையும் மூத்த உபதலைவர்களாக இருவரையும் நியமிக்க தாங்கள் மூவரும் இணங்கினர் என்றும் அதன்படியே பெப்ரவரி 11 அன்று கிழக்கில் இருந்து அழைக்கப்பட்டவர்களுக்கும் செயலாளராகத் தெரிவான குகதாசனுக்கும் இடையில் இது தொடர்பில் பேசி இணக்கம் எட்டப்பட்டு எழுத்து மூலமும் அது உறுதிப்படுத்தப்பட்டது என்றும் சிறீதரன் தெரிவித்தார். ஆனால், பின்னர் வழக்குடன் அந்த உடன்பாடுகள் எல்லாம் கைவிடப்பட்டு, இல்லா-து போய்விட்டன என்றார். தான் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், விரைவில் கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டி பதவியைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு சுமந்திரன் தனக்குக் கடிதம் எழுதியபோதே தனது தலைமை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்படும் என்பது தனக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேர்காணலின் ஒரு கட்டத்தில் சுமந்திரனை ஒரு 'ஜென்டில் மேன்' என்று தான் நம்பினார் என்றும், கட்சித் தலைவருக்கான தேர்தலில் தோற்றால் சுமந்திரன் செயலாளர் பதவியைக் கேட்கமாட்டார் என்று தேர்தல் நடப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்னரே தான் குறிப்பிட்டிருந்தார் என்றும் ஆனால் தனது நம்பிக்கை பொய்த்துப்போய்விட்டது என்றும் கூறியிருக்கின்றார்.

அவரது நேர்காணலின் சாராம்சத்தைப் பார்த்தால், சுமந்திரன் தேர்தலில் தோற்ற பின்னர் தான் தலைவராகச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு ஏற்றவிதத்தில் ஒதுங்கி வழிவிடவில்லை, தான் தலைவராகப் பொறுப்பேற்கவிடாமல் சிலர் பின்னணியில் இருந்து இயக்கி வழக்குப் போட்டு சதி செய்கிறார்கள், சுமந்திரனை நம்பினேன் ஏமாற்றிவிட்டார், இப்போது அவருக்கும் எனக்குமான இடைவெளி அதிகரித்துவிட்டது, கட்சி உறுப்பினர்கள் இடையீட்டு மனுதாரர்களாக தொடர்ந்து நுழைந்துகொண்டே இருந்தால் இந்த வழக்கு இழுபட்டுச் சென்றுகொண்டே இருக்கும், இயற்கையும் மக்களும் எனக்கு மீண்டும் தலைமைப் பதவியைப் பெற்றுத் தரும் என்று தெரிவித்திருக்கின்றார்.

சிறீதரன் இப்படித் தனக்கும் சுமந்திரனுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டு அது அதிகரித்து வருகின்றது என்று வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு முன்னர் வரை கட்சியின் கூட்டங்கள் மற்றும் சந்திப்புக்களில் இருவருக்கும் இடையில் சுமுகமான உரையாடல்களும் சந்திப்புக்களும் இடம்பெற்றுவருவதாகவே வெளியே தெரிந்து வந்தது. இப்போதுதான் முதல் தடவையாக சிறீதரன் கட்சிக்குள் நிரந்தரமான பிளவு ஏற்பட்டுவிட்டது என்பதை ஏற்-றுக்கொண்டுள்ளார்.

கட்சியின் வழக்கு ஏப்ரல் 24 திருகோணமலை நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வரவிருக்கின்றது. அதற்கு முதல் நாள் ஏப்ரல் 23 வவுனியாவில் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நடக்க இருக்கின்றது. சிறீதரன் கூறிய பிளவு வெளிப்படையாகத் தெரியவருமா, சுமந்திரனின் அழுத்தம் மற்றும் செல்வாக்கு இல்லாமல் தான் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்படவேண்டும் என்பதை சிறீதரன் நேர்மையாக, நேரடியாக வலியுறுத்துவாரா என்பது அந்தக் கூட்டத்தில் தெரியவரும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

### இறையாண்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் இரத்து தொடர்பாக மார்ச் மாதம் முன்வைத்த பிரேரணைக்கு இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்கள் உடன்படவில்லை.

தமது கடன்களின் 28 வீதத்தை குறைத்தல் உள்ளிட்ட யோசனைகளை இலங்கை ஆளும் தரப்பு பிணை முறி உரிமையாளர்களிடம் முன்வைத்திருந்தது. குறித்த யோசனைகளை நிராகரித்துள்ள பிணை முறி உரிமையாளர்கள், மேலதிக வட்டியுடன் குறித்த பிணை முறிகளை மீள விநியோகிக்கும் வேலைத்திட்டத்தையே பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கமைய, தற்போது இலங்கை செலுத்த வேண்டிய 12.55 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகைக்காக மேலதிகமாக 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்தொகையை செலுத்த நேரிடும்.

எவ்வாறாயினும், இலங்கையினால் பிணை முறி உரிமையாளர்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள், சர்வதேச நாணய நிதிய விதிமுறைகளுடன் இணங்கிச் செல்வதுடன், பிணை முறி உரிமையாளர்களின் யோசனைகள் குறித்த விதிமுறைகளுக்குப் புறம்பாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், கடன் மறுசீரமைப்புடன் தொடர்புடைய சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக, கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாலித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதமடைந்தமையே உயிரிழப்பிற்கு காரணம் என உடற்கூறாய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### ஆனந்தவர்ணனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொய்க்குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளி ஆனந்தவணனை உடன் விடுதலை செய்யவேண்டும். அவர் மட்டுமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெலிக்கடைச் சிறைச்சாலையில் முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணனைச் சந்தித்து உரையாடியிருந்தேன்.

அவர் மார்ச் 26 அன்று கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அன்றைய தினமே கைதுசெய்யப்பட்டு வெலிக்கடையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முகநூலில் 2020 இல் ஒரு படமும் 2022 இல் ஒரு படமும் பகிரப்பட்டதாகவும் அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் முயற்சிக்கிறார் என்றும் பொய்க் குற்றச்சாட்டினைச் சுமத்தி அவரைத் தடுத்துவைத்துள்ளனர்.

ஏற்கனவே அவர் 9 ஆண்டுகள் கொடிய சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் பல பொய் வழக்குகளுக்கும் முகம் கொடுத்தவர். விடுதலையாகி தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டு கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ளார்.

அடிப்படை வசதிகள் மிகவும் மோசமாகவுள்ள சுமார் 400 பேர் மாத்திரம் அடைக்கப்படக்கூடிய வெலிக்கடை விளக்கமறியல் சிறையில் 2,286 பேர் அடைத்துவைக்கப்பட்டுள்ளார்.

சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கச் சீருடையில் உள்ள படத்தை முகநூலில் பகிர்ந்தாகக் குற்றம் சுமத்தி அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தி தன்னை கைது செய்து அடைத்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

அடுத்த தடவை எப்போது நீதிமன்றில் முற்படுத்துவார்கள் என்ற திகதிகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளனர் எனவும் தெரிவித்தார். தன்னைக் கைது செய்து அடைத்துள்ளமையினால் தனது பிள்ளைகள் அநாதரவான நிலையில் இருக்கின்றனர் எனவும் தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மிகுந்த வேதனையுடன் கோரினார்.

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களது குரல்வளையை நசுக்கி தமிழர்களை தமது கொத்தடிமைகளாக வைத்துக் கொள்வதற்கான எல்லையற்ற அதிகாரத்தை பொலிஸாருக்கு வழங்கியுள்ளது. பொலிஸார் இனவாதமாகவே செயற்படுகின்றார்கள். புலிகள் இயக்க மீளுருவாக்கம் என்ற பொய்க்குற்றச்சாட்டுக்களின் கீழ் ஆனந்தவர்ணன் கைது செய்யப்பட்டுள்ளமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆனந்தவர்ணன் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும். அத்துடன் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்ட முழுமையாக நீக்கப்படல் வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றோம். அச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டுமெனவும் கோருகின்றோம் என்றார்

### கெஹலியவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப உறுப்பினர்கள் அதே உத்தியோகபூர்வ வாகனங்களில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு வருகின்றனர் எனவும் அந்த அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

### தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் அளவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய ஜனாதிபதி பொறுப்பேற்கவேண்டும். அதற்கான நாள் விரைவில் குறிக்கப்படும் என்று இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் கூறிவருகின்றது.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி ஒத்திவைக்கப்படும் என்கிற அச்சம் அரசியல்வாதிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் தொற்றிக்கொண்டுள்ளது. கடந்த காலங்களிலும் உள்ளூராட்சித் தேர்தலை ஆளும்தரப்புத் தள்ளி வைத்திருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் புதிய தேர்தல் முறையொன்றினைக் கொண்டு வருகின்றோம் என்று காரணம் கூறப்பட்டு காலரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றைப் பார்க்கும்போது ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தாமல் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கான வியூகங்கள் வகுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது. தேர்தல் நடைபெறுவதற்கான காலங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. ஆயினும் அந்தத் தேர்தல் நடைபெறுமா என்ற ஐயம் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. எனவே இன்னுமோர் அரகலய போராட்டம் தேவையா? நாடு முழுவதும் மக்கள் எழுச்சியொன்று ஏற்படவேண்டுமா? என்ற கேள்விகளும் எழுந்து நிற்கின்றதன.

ஆளும் தரப்பின் இவ்வாறான போக்கு மீண்டும் பெரும் எழுச்சியொன்றுக்கு வழிவகுக்கலாம். அப்படிப்பட்ட எழுச்சிகள் பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்கள் பின்தள்ளிப்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர்
Kalaikkathir

# சாய்ந்தமருதில் புற்றுநோயை உண்டாக்குகின்ற தன்மைகொண்ட சுவையூட்டிகள் கண்டுபிடிப்பு

## சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் எச்சரிக்கை



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள் மீது கடந்த சில தினங்களாக திடீர் சோதனை நடவடிக்கையை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பரின் தலைமையிலான சுகாதார குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

சுகாதாரமற்ற உணவுகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேச இரவு நேர உணவகங்கள், டேஸ்ட் கடைகள், கோழி பதப்படுத்தி விற்கும் இடங்கள் போன்றவற்றில் செவ்வாய்க்கிழமை இரவு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றை பார்வையிட்ட அவர் உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும் உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீன்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன் அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தார்.

அதனை ஒட்டியதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும் நிலையங்கள் மீது திடீர் பரிசோதனையும், முற்றுகையும் இடம்பெற்று மாலை நேர உணவகங்களில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள், கழிவு எண்ணெய்கள் மற்றும் புற்றுநோயை உண்டாக்கும்



தன்மை கொண்ட சுவையூட்டிகள், கலப்படம் செய்யப்பட்ட சுவையூட்டிகள் போன்ற பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, முறையான களஞ்சிய வசதி இல்லாத மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அதே போன்று சில உணவகங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க தேவையான மேலதிக ஒழுங்குகளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேற்கொண்டுள்ளது.(05)

# பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திக்கு வவுனியாவில் அஞ்சலிகள்



நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டு நிலையில் அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியாவை வந்தடைந்த நிலையில் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

போராட்ட பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பொங்கு தமிழ் நினைவுத்தூபி, பண்டார வன்னியன் நினைவு சதுக்கம், கோவில்குளம், ஈச்சங்குளம், வவுனியா வடக்கு உள்ளிட்ட பலபகுதிகளில் சென்றதுடன்,




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அன்னை பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வடக்கு - கிழக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள நிலையில் வவுனியாவை வந்தடைந்தது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்க தலைவி கா.ஜெயவனிதா ஈகைச்சுடரை ஏற்றி வைத்ததுடன், தாய்மாரால் மலர்மாலை அணிவித்ததையடுத்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (05 - 100)




# வவுனியா வடக்கில் சிறப்பாக நடந்த வடக்கு மாகாண புத்தாண்டு விழா



வடக்கு மாகாண புத்தாண்டு விழா வவுனியா வடக்கு நெடுங்கேணி மகாவித்தியாலய மைதானத்தில் செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை, வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம், தொழில்துறை திணைக்களம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேசசெயலகமும் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து நடத்திய குறித்த நிகழ்வு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றதுடன் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



இதன்போது பாரம்பரிய முறையில் விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்வு இடம் பெற்றதோடு, தமிழ் சிங்கள கலை நிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், மறைந்து செல்லும் தமிழர் பாரம்பரிய கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகள், பாரம்பரிய உணவு கண்காட்சிகளும் இடம் பெற்றிருந்தன.



இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத் சந்திர, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ் குமார், வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் இ.பிரதாபன், அரச அதிகாரிகள், வவுனியா வடக்குகல்விவலய அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உரிய நேரத்தில் தேர்தல் அவசியம்

புதிய அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடக்குமா என்கிற சந்தேகம் நீங்கியபாடாக இல்லை. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரனும் அந்தச் சந்தேகத்தை நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது எழுப்பியிருந்தார். இந்த ஆண்டு அரசுத் தலைவர் தேர்தல் நடக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகத் தெரிவித்திருந்தாலும், அந்தத் தேர்தலில் அவர் வெல்வதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லாத நிலையில் கடைசி நேரத்தில் தேர்தலை அவர் ஒத்திவைக்கக்கூடும் என்கிற சந்தேகம் பரவலாக உள்ளது. ரணிலையும் அவரது உறுதிமொழிகளையும் நம்பமுடியாது என்று மக்களும் அரசியல் கட்சிகளும் உறுதியாக நம்புவதே அதற்குக் காரணம்.

அப்படி, அரசுத் தலைவர் தேர்தலோ நாடாளுமன்றத் தேர்தலோ ஒத்திவைக்கப்பட்டால் அதனை எதிர்க்கத் தயங்கமாட்டோம் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார். அத்தகைய எந்தவொரு முயற்சியையும் சகித்துக்கொள்ளவே மாட்டோம் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் 'தி மோர்னிங்' பத்திரிகைக்கு அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முயற்சியானது பொதுமக்களுக்கான வாக்குரிமை மீதான நம்பிக்கையைச் சிதைத்து, அதனைச் சவாலுக்குட்படுத்திவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். தேர்தல் நடக்குமா நடக்காதா என்கிற சந்தேகம் மக்களிடம் எழுந்திருப்பது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறியிருக்கிறார்.

அரசுத் தலைவர் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்துவதற்கு பொருந்தும் அரசமைப்பு விதிகள் குறித்து விளக்கமளித்த அவர், அரசுத் தலைவர் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ, எது முன்னதாக நடத்தப்பட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்படவில்லை என்றாலும், தேர்தல்கள் அரசுத் தலைவரினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக்காலங்கள் முடிவடைவதற்குள் நடத்தப்படவேண்டும் என்பது அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

தற்போதைய அரசுத் தலைவர் (ரணில் விக்கிரமசிங்க) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுத் தலைவருக்கு (கோட்டாபய ராஜபக்ச) மாற்றாக இருந்தாலும், அவரது பதவிக் காலம் இந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது, எனவே அதற்கு முன்னதாக அரசுத் தலைவர் தேர்தல் நடக்கவேண்டும் என்றும் விளக்குகிறார் நவரத்ன. அதுபோன்றே நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைகையில் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அதற்கு முன்னதாகவே நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற சூழலில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவே நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியும் என்பதையும் ஏற்றுக்கொள்ளும் அவர், எப்படியிருப்பினும் தேர்தல்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவினதும் ஆளும் தரப்பினதும் கடமையாகும் என்றார்.

இரண்டு தேர்தல்களும் ஒத்திவைக்கப்படலாம் என்ற கவலைகள் குறித்த கேள்விக்கு அவர் மேலும் கூறியதாவது:

தேர்தலை ஒத்திவைக்க எந்த (சட்ட) ஏற்பாடும் இல்லை. இவை அரசமைப்புத் தேவைகள். இந்த அரசமைப்பு விதிகளை நீங்கள் புறக்கணிக்கப் போகிறீர்கள் என்றால், அது அரசமைப்பை திருத்துவதன் மூலமோ அல்லது நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையின் ஒப்புதலையும் பொதுக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு மூலமும்தான் செய்யப்பட வேண்டும். தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதில் அதிகாரிகளுக்கு உண்மையாக ஆர்வம் இருந்தால், அது முன்கூட்டியே செய்யப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நவரத்னவின் கருத்துக்கள் உண்மையானவை. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதைச் செய்வதாக இருந்தாலும் அதனை வெளிப்படைத் தன்மையுடனும் அரசமைப்புக்கு முரண்படாத வகையிலும் செய்யவேண்டும். திருட்டுத்தனமாக, பின் வழிகளால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்தது போன்று செயற்படாமல் நேர்மையுடனும் ஜனநாயகத்தை மதித்தும் செயற்படவேண்டும். தேர்தல் சட்டத்தை திருத்தும் எண்ணம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தால் அதனை கடைசிவரை வைத்து இழுத்தடிக்காமல் இப்போதே வெளிப்படுத்தி விவாதிக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக நாடு பொருளாதார ரீதியில் ஒரு காத்திரமான நிலையை நோக்கி நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அவசியம். எனவே தேர்தல்களை உரிய காலத்தில் நடத்துவதே சரியானதும் அவசியமானதுமாகும்.

# சிறுவர் ஆபாசக் காணொலிகள் மூலமாக பணம் பெற எப்படி அனுமதிக்கப்படுகிறது?

**நிக்கோலஸ் கிறிஸ்டோஃப்**

கனடாவைச் சேர்ந்த ஒரு சிறுமியின் கதை இது. அந்தச் சிறுமி குறிப்பிட்ட தளத்திலிருந்து தனது காணொளிகளை நீக்க மன்றாடுகிறாள். 'நீக்கவில்லை என்றால் பரவாயில்லை; வக்கிர நோக்கத்துடன் பார்க்கிறவர்களுக்குத் தனது அவமானத்தைக் காட்ட இணையதள நிறுவனம் இதைப் பத்திரமாக வைத்து, இரண்டு மடங்காக வெளியிடட்டும்' என்று கடைசியில் அவள் கூறினாள். இது உலகம் முழுக்க நடக்கிறது. இளம்பெண்கள் – சிறுமிகள், இளைஞர்கள் – சிறுவர்கள் என அனைவரும் வன்புணரப்பட்டு ரகசியமாகப் படமெடுக்கப்படுகிறார்கள். பிறகு, அவை இணையதளங்களில் கள்ளத்தனமாகப் பதிவேற்றமாகின்றன. 'அவமானத்தால் நான் நிலைகுலையவில்லை. நான் மிகப் பெரிய தன்னம்பிக்கையைப் பெற்றிருக்கிறேன். இதற்கு எதிராக நாம் போராட வேண்டும்' என்று அந்த மாணவி கூறுகிறாள்.

'யூடியூப்' போல யார் வேண்டுமானாலும் நிர்வாண, ஆபாசக் காட்சிகளைப் பதிவேற்றக்கூடிய ஆபாசத் தளத்தின் முன்னோடியான ஒரு தளத்தைப் பற்றி 2020 டிசெம்பரில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரையைத் தொடர்ந்து கிரெடிட் கார்ட் நிறுவனங்கள் அதனுடனான தங்களது பரிவர்த்தனையை நிறுத்தியிருக்கின்றன. கனடா, அமெரிக்கா நாடுகள் அதன் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன.

ஆனால், நான் குறிப்பிட்டதுபோல, இம்மாதிரி கள்ள ஊடுருவல்கள் நடப்பது ஒரு நிறுவனத்தில் மட்டுமல்ல; ஒரு தொழில் துறையே இதுவிடயத்தில் சுதந்திரமாக இயங்குகிறது. இதில் ஒன்றை மட்டும் நிறுத்துவதால் சந்தையில் போட்டிதான் அதிகமாகும். அதுதான் இங்கு நடக்கிறது.

நான் குறிப்பிட்ட அந்தத் தளம் மனசாட்சியோடு தங்களது காணொளிகளை நீக்கினாலும் லட்சக்கணக்கான அதன் வாடிக்கையாளர்கள் வேறொன்றைத் தேடி ஓடிவிடுவார்கள். ஆக, நாம் செய்ய வேண்டியதெல்லாம் மோசமான இந்த மொத்த கும்பலையும் கட்டுப்படுத்துவதே. ஆனால், அழிக்கவே முடியாத ஒரு பழமையான மிருகத்தைப் போல, கூகுள் போன்ற எல்லாத் தேடல் பொறிகளிலும் எளிதில் கிடைத்துவிடுகிற அளவு இன்று அவை வளர்ந்திருக்கின்றன.

'உலக அளவில் பருவ வயதினர்களுக்கான மிகப் பெரிய இணையதளம் இது. சராசரியாக ஒரு நாளைக்கு இரு நூறு கோடி வாடிக்கையாளர்கள் வருகிறார்கள்' என்று 'எக்ஸ் வீடியோஸ்' பெருமைகொள்கிறது. இதனுடைய சக இணையதளமான 'எக்ஸ்என்'னும், இதே அளவுக்கு யாஹு, அமேசான், நெட்ஃபிளிக்ஸ் போன்றவற்றைவிட அதிக வாடிக்கையாளர்களைக் கொண்டது. இவை இரண்டும் புதிரான பிரான்ஸ் இரட்டையர்கள் போன்ற தோற்றத்துடன் வென்செஸ்லஸ் சதுக்கத்துக்கு அருகில் ஒரு சாதாரணமான கட்டடத்தில் இயங்குகின்றன. இந்தக் கட்டடம்தான் ஆபாச சாம்ராஜ்யத்தின் மையம். ஒரு நாளைக்கு 600 கோடி வாடிக்கையாளர்களைக் கொண்ட, உலகம் முழுக்க சபலத்தைத் திணிக்கும் இடம்.

### ஏன் நிறுவனங்கள் இதிலிருந்து வெளியேறுவதில்லை?

கடந்த ஓகஸ்ட் மாதம் ஹெதர் லகார்தே என்கிற அல்பெர்திய இளம் பெண்ணின் அந்தரங்கக் காணொளியை அவரது முன்னாள் கணவர் பதிவிட, உலகம் பூராவும் அது பார்க்கப்பட்டது. உலகமே நொறுங்கிப்போய்விட்டதாக அந்தப் பெண் கண்ணீரைப் பகிர்ந்தார். முன்னாள் கணவரால் ஒரு பெண் பிரக்ஞையற்ற நிலையில் படுக்கையில் வன்புணரப்படுவது எவ்வளவு மோசமானது.

மயக்க நிலையில் அவர் வன்புணரப்படுவதை இரண்டு லட்சம் பேர் பார்த்திருக்கிறார்கள். அவமானமும் உச்சபட்சத் துரோகமும் ஏற்பட்ட அன்றே அவர் தற்கொலை எண்ணத்துக்கு வந்துவிட்டார். 'கேரேஜில் தொங்கிய கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஒரு தூணுக்குக் கீழ் நின்றுகொண்டிருந்தேன். பிறகு, எனக்கு நானே தைரியம் சொல்லிக்கொண்டேன். இதுதான் முடிவு என்றால் அவன் நாளைக்கு வேறு சிலரிடம் இதைச் செய்வான்.' தனது கதையின் மூலம் 'இது மற்ற பெண்களுக்கு ஏற்படக்கூடாது' என்று தீர்மானித்ததாலேயே தனது பெயரைக் கட்டுரையில் குறிப்பிடவும் அனுமதித்தார். ஆனால், அவரது வாழ்க்கை தினந்தோறும் அவமானங்களால் நகர்கிறது. இணையதளத்தில் தேடி அலசி தனது நிர்வாணப் படங்களை நீக்கும்படி தொடர்ந்து வலியுறுத்தி சிலவற்றை வெற்றிகரமாக நீக்கியுமிருக்கிறார். பல நீடிக்கின்றன.

இத்தகு தளங்களில் இருக்கும் அனைத்துக் காணொளிகளிலும் இருப்பது குழந்தைகளோ அல்லது சுயநினைவற்ற நிலையில் இருக்கும் பெண்களோ அல்ல. ஆனால், பெரும்பாலான உடல்கள் ஏதோவொரு வகையில் வேதனையுடன் உள்ளவைதான்.

காணொளி எங்கு பதிவேற்றம் செய்யப்படுகிறது, சம்மதத்துடன் எடுக்கப்பட்டதா என்பதைக் கண்டு பிடிப்பது எளிதல்ல. இத்தகு தளங்களில் இருக்கும் எட்டு காணொளிகளில் ஒன்று சம்மதமின்றியே எடுக்கப்படுவதாக பிரிட்டிஷ் குற்றவியலின் பெரும்பாலான ஆய்வுகள் கூறுகின்றன. சிலவற்றில் போதையேற்றப்பட்ட அல்லது சுயநினைவற்ற பெண்களும் குழந்தைகளும் வன்புணரப்படுகின்றனர். சிலர், உடை மாற்றும் அறை அல்லது குளியலறை எனப் பெண்களுக்குத் தெரியாத வகையில் எடுக்கப்படுகின்றன. இனவெறிக்காகவும் பெண் வெறுப்பைக் காட்டுவதற்கும் அவர்களைக் கீழாகச் சித்தரிக்கவும் இவை செய்யப்படுகின்றன. ஒரு காணொளியின் தலைப்பு, 'அப்பா இது தவறு. தயவுசெய்து வேண்டாம்' என்றிருக்கிறது.

தனது வாடிக்கையாளர்கள் தளத்தில் 'இளம்' என்று தேடும்போது கிடைக்க வசதியாக 'சிறுமி, பையன், இளம்பெண், விடலை' என்றே இத்தளங்கள் குறிப்பிடுகின்றன. இதில் வரும் பலரும் விடலைப் பருவத்தினர்தான். சிலர் வாழ்க்கை சீரழிந்த சிறுவயதினராகவும் இருக்கிறார்கள்.

### இரண்டு பெண்களின் கதை

ஒரு தாய்லாந்து இளம்பெண் துயரத்துடன் என்னிடம் அவள் கதையைப் பகிர்ந்தாள். அவள் எட்டாவது படிக்கையில் நடந்ததை விவரித்தாள். முகநூலில் அறிமுகமான ஒருவன், மாடலாகும் ஆலோசனையைக் கூறியிருக்கிறான். அவன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவள் தனது நிர்வாண காணொளிகள் உட்பட அனைத்தையும் அனுப்பியிருக்கிறாள். பாலியல் தளஙகளில் வெளியாகும் வரை தான் அனுப்பியவை என்ன ஆனதென்று அவளுக்குத் தெரியவில்லை.

'தாய்லாந்து நாட்டில் இசையில் பெரிய ஆளாக வர வேண்டும் என்கிற நம்பிக்கை இருந்தது. இனி அது நடக்குமெனத் தோன்றவில்லை. என்னுடைய நிர்வாணப் படம் இணையதளத்தில் இருக்கிறது. என்னுடைய லட்சியம் முடிந்துவிட்டது.'

தாய்லாந்தில் இருக்கும் 'தி ஹக்' என்கிற நல்லெண்ண அமைப்பானது இதுபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்காகச் செயல்பட்டுவருகிறது. அவர்கள்தான் காணொளிகளையும் நீக்கியிருக்கிறார்கள். இருந்தும், தொடரும் அவமானத்தைத் தாங்கவியலாமல் பள்ளியிலிருந்து அவள் நின்றுவிட்டாள்.

'நிச்சயம் ஏதாவது சாதிக்க வேண்டும் என்கிற வேகம் இருக்கிறது. ஆனால், இப்போது முடியாது' என அவள் கடும் கோபத்துடன் பதிவிட்டிருந்தாள். அவமானப்பட்டிருந்தாலும் இணையதள உலகில் இதுபோன்று நடப்பதை மற்றவர்கள் புரிந்துகொள்வதற்குத் தன்னுடைய அனுபவம் உதாரணமாக இருக்கட்டும் எனக் குறிப்பிட்டாள்.

இந்த மோசடிகளெல்லாம் போர்னோகிராபி மாதிரியான தளங்களில் மட்டும் நடப்பவை அல்ல. ட்விட்டர், பேஸ்புக், ரெட்டிட் போன்றவையும் குழந்தை வன்புணர்வு மோசடிகளை விதைப்பவைதான். இம்மாதிரி மோசடியால் பாதிக்கப்பட்ட இல்லினாய்சைச் சேர்ந்த பெண்ணை நேர்கண்டேன். தரகர் ஒருவன் பதிவேற்றிய அவளது காணொளி ஒன்று, ஆறு வருடங்களாக எத்தனையோ முறை நீக்க கோரிக்கை விடுத்தும் ட்விட்டர் நிறுவனத்தால் கண்டுகொள்ளாமல் விடப்பட்டிருக்கிறது. நான் அதை நீக்கும்படி கேட்டு, பிறகு அவை அழிக்கப்பட்டன. ஆனால், இம்மாதிரி அனுமதியில்லாமல் எடுக்கப்பட்ட நிர்வாணப் படத்தை நீக்குவது என்னால் மட்டுமே சாத்தியமற்றது.

அவருடைய நான்கு காணொளிகள் அங்கு இருப்பதைக் கவனித்துப் பெரு முயற்சிக்குப் பின் அவை அழிக்கப்பட்டன. கிட்டத்தட்ட அவை ஒரு லட்சம் முறை பார்க்கப்பட்டவை. 'மோசடி என்பதைவிட நான் மேலும் மேலும் ஏமாற்றப்பட்டுப் பயன்படுத்தப்படுவதாகத்தான் உணர்கிறேன்' என்று அவள் சொன்னாள்.

கூகுளில் தேடத் தொடங்கியதுமே ஆபாசத் தொடர் அமைப்புகளுக்குள் சட்டென நுழைந்திட முடியும். 'போர்ன் தளங்களுக்கு கூகுளின் தரவரிசை தேவை. அவர்களுக்கு அது உயிர்நாடி மாதிரி. அதற்காகவே கூகுளுடன் இணைந்துள்ளன' என்று பாலியல் மோசடிகளுக்கு எதிராகப் போராடும் 'ஜஸ்டின் டிபன்ஸ் நிதியமைப்'பின் தலைவர் லைலா மிக்கெல்வெய்ட் குறிப்பிடுகிறார். 'இந்தத் தளங்களுக்குள் நுழைய கூகுள்தான் முதல் நிலை.'

'சுயநினைவற்ற பெண் வண்புணர்வுக் காணொளி' என கூகுளில் தேடுவது பற்றிய சமீபத்திய ஆய்வில், பல காணொளிகள் அதில் காட்டப்படுகின்றன என்றும், குறிப்பாகக் கழுத்து நெறித்துக் கொல்லப்பட்ட பெண்ணின் காணொளியும் அதைத் தொடர்ந்து அவளது உடல் நாசப்படுவதும் இருக்கின்றன என்றும் தெரியவருகிறது. பள்ளி மாணவிகளை கூகுளில் தேடும்போது, விடலைப் பருவத்தினரின் காணொளிகளை வைத்திருக்கும் தளங்கள் வருகின்றன. அவற்றில் இருப்பதில் பெரும்பாலானவர்களுக்கு 18 வயதுகூட இருக்காது. எப்படி இது நடக்கிறது?

குழந்தை வன்புணர்வு மோசடிகளைப் பணமாக்கும் நிறுவனங்களுக்கு எதற்காக கூகுள் உடந்தையாக இருக்க வேண்டும் என்கிற காரணத்தை அறிய முற்பட்டபோது நியாயமான பதில் கிடைக்கவில்லை. கூகுள் சில வரையறைகள் வைத்திருக்கிறது. 'எப்படி என்னுடைய கணவருக்கு விஷம் கொடுப்பது?' என்று தேடிப் பார்க்கையில் தவறுசெய்வதை நிறுத்துவதைப் பற்றிய வழிமுறை கிடைக்கிறது. 'எவ்வாறு தற்கொலை செய்வது?' என்பதற்கான பதில்கள் தற்கொலைத் தடுப்பு உதவி மையத்தின் தொடர்புடன் வருகின்றன. வன்புணர்வுக் காணொளிகளைத் தேடும்போதும்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# விக்கிலீக்ஸ் வழக்கை கைவிடும்

4ம் பக்க தொடர்ச்சி...........

கூகுள் ஏன் இதே மாதிரி செய்யக்கூடாது?

தொடக்கத்தில் எந்தப் பதிலையும் தராத 'எக்ஸ் வீடியோஸ்', இந்தக் கட்டுரை வெளியான பிறகு பெயருக்கு ஒரு அறிக்கை வெளியிட்டது. 'இதுமாதிரி முறையற்றதை 'எக்ஸ் வீடியோஸ்' அனுமதிப்பதில்லை. இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதற்கான பாதுகாப்பும் தனியுரிமை நெறிமுறைகளையும் கொடுக்கிறோம்' என்றது.

'எக்ஸ் வீடியோஸ்' மற்றும் 'எக்ஸ்என்' நிறுவன உரிமையாளர்கள் ஸ்டீஃபன், மலோரே டெபோர் பகாட் இருவரும் இரட்டையர்கள் மாதிரி. இதில் 42 வயதான பகாட், சமூக ஊடகங்களில் வருவதில்லை. ஆனால், இவர் 2001 தொடக்கத்தில் 'போர்னோகிராபிக்' இதழிலிருந்து படங்களைப் பிரதியெடுத்து வெளியிட்டுதான் சாதாரணமாக இணையதளத்தைத் தொடங்கியிருக்கிறார் என்று மற்ற தொழில் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

'பார்ன்ஹப்' தளத்தை விற்பதற்கு முன் அதைக் கட்டமைத்த ஃபேபியன் தைல்மன், இந்த பகாட் பற்றிக் கூறும்போது, 'ஒரு தனியராக இணையதளத்தில் தன்னை முழுக்க ஈடுபடுத்திக்கொண்டு தனிமை நாட்டத்தைப் போக்கிக்கொண்டிருந்தார்' என்கிறார்.'வேகஸ் கூட்டாய்வுச் சந்திப்பின்போது அவர் தனது அறையில் வேலை செய்துகொண்டிருந்தார். அவரது தளத்துக்கு 2012இ-ல் 120 கோடி விலை கொடுக்கத் தயார் என்றதும் பகாட் பேச்சைத் துண்டித்துவிட்டு வீடியோ கேம் விளையாடச் சென்றுவிட்டார்' என்றார் தைல்மன்.

**என்ன செய்வது?**

இந்தப் பிரச்சினை பாலியல் தளத்தைப் பற்றியது அல்ல. குழந்தை வன்புணர்வு மற்றும் பாலியல் மோசடிகள் தொடர்பானது. பாலியலுக்கு ஆதரவாகவும் மோசடிகளுக்கு எதிராகவும் நம்மால் இருக்க முடியும். முறையற்ற பாலியல் மீதான நடவடிக்கைகள் என்கிற நியாயமான கோரிக்கை சில சமயம் தற்காலிகத் தீர்வாக அமைந்துவிடக்கூடும். மாறாக, அதைக் கவனமுடன் மேற்கொண்டால் ஓரளவு அவற்றைச் சரிசெய்யலாம்.

உதாரணமாக, அமெரிக்க அரசும் எப்போதும் பதிப்புரிமைப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும். மோசடியில் ஈடுபட்டால் நஷ்டமும் இழப்பும் ஏற்படும் என்பது பிரதானப் பாலியல் நிறுவனங்களுக்கும் நன்றாகவே தெரியும். அமெரிக்காவும் மற்ற நாடுகளும் கவனத்துடன் குழந்தைப் பாலியல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**இவை எளிதல்ல. ஆனால், இந்த மூன்று வழிகள் உதவக்கூடும்:**

1) முறையற்ற பாலியல் காணொளிகளுடன் தொடர்பில் இருக்கும் நிறுவனங்களுடனான தங்கள் உறவை கிரெடிட் கார்ட் நிறுவனங்கள் நிறுத்தவேண்டும். உதாரணமாக, இது பற்றிய கட்டுரை வெளியானபோது இதுவரை 'எக்ஸ் வீடியோஸ்' விளம்பரதாரராக இருந்த 'பேபால்' கிரெடிட் கார்ட் நிறுவனம் உடனடியாகத் தன் தொடர்பை நிறுத்திக்கொள்வதாக அறிவித்தது. தளத்தில் சம்பந்தப்பட்ட காணொளியில் இருப்பவரது வயது, ஒப்புதல் தகவல்கள் இருந்தால் மட்டுமே பணம் செலுத்த முடியும் என 'மாஸ்டர் கார்ட்' நிறுவனம் அடுத்து அறிவித்திருக்கிறது. இதை மற்ற நிறுவனங்களும் செய்ய வேண்டும்.

2) கூகுள், யாஹூ, பிங் போன்ற தேடுதளப் பொறிகள் இதுபோன்ற தளங்களுக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது.

3) குற்றம் மற்றும் குடிமையில் சட்ட விழிப்புணர்வுடன் இத்தகைய நிறுவனங்களின் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். 14 வயதான ஒரு பெண் பாலியல் மோசடிக்கு உட்படுத்தப்பட்டதை எதிர்த்து கடந்த மார்ச் மாதம் 'எக்ஸ் வீடியோஸ்' மீது வழக்கு தொடர்ந்திருக்கிறாள். ஆனால். பிரிவு 230-ன் கீழ் (மூன்றாம் நபரிடமிருந்து இணையதள நிறுவனத்தைப் பாதுகாத்தல்) தகவல் தொடர்பு ஒழுக்க முறை விதியின்படி வழக்கு நிறுத்தப்பட்டுவிட்டது. இரு தரப்பினரும் நீதிமன்றத்தில் ஆஜராகவும் வழக்கு மீண்டும் நடத்தப்பட்டது. முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்தியதில் நிச்சயமாக இது ஒரு திருப்புமுனைதான்.

இங்கே இன்னொரு விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தனிப்பட்டவர்களின் போராட்டங்கள் விளைவாகவே 'எக்ஸ் வீடியோஸ்' போன்ற நிறுவனங்களின் அத்துமீறல்களை நீக்க முடிகிறது. மிகப் பெரிய நிறுவனத்துக்கு எதிராகப் போராடிய 14 வயது பெண்ணுக்காக நமது ஆதரவை வெளிபடுத்தியிருக்க வேண்டும்.

நிறைய மோசடி நிறுவனங்கள் லாபம் கொழித்திருக்கின்றன. ஒன்றுமறியாத குழந்தைகளும் இளம் வயதினரும்தான் அதன் விலை.

பள்ளியில் நன்றாகப் படிக்கும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 16 வயது பெண் தனது நிர்வாணப் படத்தை 17 வயது தோழனுக்கு, 'உன்னை நேசிக்கிறேன் உன் மீது நம்பிக்கை இருக்கிறது' என்று அனுப்பியிருக்கிறாள். அதை அவளது தோழன் ஸ்க்ரீன்ஷாட் எடுத்து சில நண்பர்களுக்கு அனுப்பியிருக்கிறான். பிறகு, அது அவர்களது நண்பர்களிடம் சென்று, கொஞ்ச நாளுக்குள் பள்ளி முழுக்கப் பரவிவிட்டது. யாரோ சிலர் அவளது பெயரையும் பள்ளியையும் வைத்து இணையத்தில் பதிவேற்றவும் 7,000 தடவை அந்தப் படம் பதிவிறக்கமாகியது. அவளது குடும்பம் வேறொரு நகரத்துக்குப் புலம்பெயர்ந்துவிட்டது. ஆனாலும், மாணவர்கள் அவளை அடையாளம் கண்டுவிட்டார்கள். ஒரு கட்டத்தில் குடும்பம் ஆஸ்திரேலியாவின் வேறொரு மாநிலத்துக்குச் சென்றது. படம் இணையத்தில் பதிவேற்றப்பட்டு உலகம் முழுக்கப் பரவி இனி இதிலிருந்து மீள முடியாது என்று முடிவெடுத்த அந்தப் பெண் பள்ளிக்குச் செல்ல மறுத்துவிட்டுப் போதைக்கு அடிமையானதுடன் 21 வயதில் தன் வாழ்வையும் முடித்துக்கொண்டாள்.

இந்த வழக்கில் வாதாடிய ஆஸ்திரேலியக் காவல் அதிகாரி பவுல் லிதர்லன்ட் என்னிடம் சொன்னார்: நாம் எதை முன்னிறுத்தப்போகிறோம்? பாலியல் தளங்களின் தரப்பிலா, இப்படிப் பாதிக்கப்படும் பெண்களின் தரப்பிலா?

© தி நியூயார்க் டைம்ஸ், தமிழில்: தூயன்
நன்றி: அருஞ்சொல்

# புளியங்குளம் பொலிஸார் இளைஞர் மீது தாக்குதல்

## சின்னப்பூவரசங்குளம் வாசி குற்றச்சாட்டு

*வெளிநாட்டில் இருந்து வருகைதந்த நபர் ஒருவருடன் சேர்ந்து புளியங்குளம் பொலிஸார் தன்னை தாக்கியதாக தெரிவித்து வவுனியா வைத்தியசாலையில் குடும்பஸ்தர் ஒருவர் திங்கட்கிழமை இரவு சேர்க்கப்பட்டுள்ளார்.*

*வவுனியா, சின்னப்பூவரசங்குளத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவித்த போது -*

*திங்கட்கிழமை விசாரணை ஒன்று இருப்பதாக புளியங்குளம் பொலிஸார் என்னை அழைத்தனர். நான் அங்கு சென்ற நிலையில் எனது தொலைபேசி, கைப்பை என்பன பறிக்கப்பட்டு இரு கையிலும் விலங்கு போடப்பட்டது.*

*பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட ஏனைய பொலிஸாரும் என்னைப் பிடித்து வைத்திருக்க, வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து என்னைத் தாக்கியிருந்தார்.*

*பின்னர் நாய்போல என்னை இழுத்துச் சென்ற அவர்கள் வெளிநாட்டில் இருந்து வந்த நபரின் வாகனத்தில் ஏற்ற முற்பட்டனர். இதன்போது நான் பொது மக்களின் உதவியை நாடி பிரதான வீதியை மறித்திருந்தேன். பின்னர் மீண்டும் என்னை பொலிஸ் நிலையத்திற்குள் இழுத்துச் சென்றனர். அங்கு பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி அவரது சப்பாத்து கால்களால் எனது நெஞ்சில் தாக்கினார்.*

*பின்னர் அங்கு வந்த பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர், என்னிடம் வாக்குமூலம் பெற்றுவிட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து என்னையும் எனது மனைவி பிள்ளைகளையும் வீட்டிற்கு அனுப்பியிருந்தார். பொலிஸார் தாக்கியதால் எனது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன். - என்றார்.*

*இதேவேளை, குறித்த விடயம் தொடர்பாக தாக்கப்பட்டவரின் மனைவி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன், வைத்தியசாலை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (05 -100)*




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பட்டிருப்பு வலய பணிப்பாளராக புவனேந்திரன் பதவியேற்றார்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரான செல்லத்துரை புவனேந்திரன் பட்டிருப்பு வலயக்கல்விப்பணிப்பாளராக(மேலதிக) செவ்வாய்க்கிழமை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஏலவே பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராகவிருந்த ரி.சிறிதரனுக்கு எதிராக அண்மைக் காலமாக அங்கு தொடர் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்தமை தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து அவர் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இணைக் கப்பட்டுள்ளார்.

கல்முனை வலய கல்வி பணிப்பாளராக இருந்த செல்லத்துரை புவனேந்திரன்கிழக்குமாகாணமேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு கடமையாற்றிக் கொண்டுவந்தவேளை அக்கடமைக்கு மேலதிகமாக பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் செவ்வாய்க்கிழமை தனது கடமையை பொறுப்பேற்றார்.

இலங்கை கல்வி நிருவாக சேவை தரம்1 அதிகாரியான புவனேந் திரனுக்கான நியமனக் கடிதம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப் பட்டது.

காரைதீவைச் சேர்ந்த இவர், 2009.09.09இல் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்றதுடன் கல்விச்சேவையில் இணைந்துகொண்டார்.

அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி இலங்கைகல்விநிர்வாக சேவையின் முதலாம் வகுப்புக்கு 2021.03.23 முதல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் 2009 இல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் இணைந்து கல்முனை கல்வி வலயத்தில் கடமையாற்றிய பின்னர் ,2010 முதல் 2018 வரை சம்மாந்துறை கல்வி வலயத்தில்கல்விஅபிவிருத்திதிட்டமிடல் நிர்வாகம் போன்ற பிரிவுகளில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, 2019 இல் மீண்டும் கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று 2020.04.16 முதல் கல்முனை கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்திருந்தார்.

இவர் ஆரம்பக்கல்வியை காரைதீவு இ.கி.மிசன் ஆண்கள் பாடசாலையிலும் ,இடைநிலைக்கல்வியை விபுலாநந்த மத்தியகல்லூரியிலும், கல்முனை பற்றிமா தேசிய கல்லூரியிலும் பயின்று, கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப்பட்டதாரியாகி, பிரான்ஸில் தனது கல்வித்திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தில் முதுநிலைமாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.(05)

# புத்தாண்டு நிகழ்வில் கிரீஸ் மரம் சரிந்து வீழ்ந்ததில் நால்வர் காயம்

கம்பளை - கம்பளவெல பிரதேசத்தில் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் நடப்பட்டிருந்த கிரீஸ் பூசப்பட்ட மரம் சரிந்து வீழ்ந்ததில் நால்வர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் உள்ளிட்ட பெரும்பாலான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

புத்தாண்டு நிகழ்வு இடம்பெறும் இடத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த கிரீஸ் மரத்தில் 5 பேர் கொண்ட குழுவொன்று ஏறியுள்ளது.

இந்நிலையில் மரத்தில் ஏறிய இக்குழுவினர் நீண்ட நேர முயற்சியின் பின்னர் மரத்தின் உச்சியில் ஏறி நின்று வெற்றிக் கொடியை எடுக்க முற்பட்ட போது இந்த மரம் அங்கிருந்த இளைஞர்கள் மீது சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து காயமடைந்த நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் மடு கல்வி வலயத்துக்கு திடீர் வருகை

சங்கத்தின் பொதுச் செயலாளர், அச்சங்கத்தின் உபதலைவரும் மடுவலய பொறுப்பாளர் ம.நிஜகரன் அவரின் வேண்டுகோளின்படி மடு கல்வி வலயத்திற்குச் சென்று, அங்கு பணி புரியும் அதிபர் ஆசிரியர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்துள்ளார்.

கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிக அளவில் நிலவுவதை அங்கு கடமையாற்றும் அதிபர்களின் ஊடாகக்; கேட்டறிந்து கொண்ட பொதுச்செயலாளர் இதற்குக் காரணம் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை வடக்கு மாநிலத்தில், கல்வி அதிகாரிகளும் வாக்குப் பொறுக்கும் அரசியல்வாதிகளும் நடைமுறைப்படுத்தாமையே. இதை முறியடிப்பதற்கு எங்களுடைய உங்களுடைய இந்தச்சங்கத்தைப்போல அரசியல் கலப்பில்லா சங்கத்தின் பிரசன்னம் தேவையாகும் என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.

இந்தவலயத்தில் பாடசாலைச்சமூகத்தினர் போக்குவரத்து வசதிகள் இன்மை, காட்டு விலங்குகளின் அபாயம், அவசர தேவையை உடனடியாகப் பூர்த்திசெய்ய முடியாமை, தங்குமிட வசதிகள் சீர் இன்மை, ஆசிரியைகளுக்கு உரிய பாதுகாப்பு இன்மை, ஆசிரிய வேதனத்தை விட வாழக்கைச் செலவை அதிகம் எதிர்கொள்ளல், வீதிகள் சீரற்று காணப்படல், தகுந்த சுகாதார வசதிகள் இன்மை இவ்வாறான பல சிக்கல்களை நாளாந்தம் எதிர்கொள்கின்றனர்.

இவற்றால், ஆசிரியர் பலர் மனவழுத்தத்திற்கு உள்ஜாகியுள்ளனர். இவையெல்லாம் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றால், கல்வி சுயாதீனமாக்கப்பட்டு தேசிய ஆசிரியர் இடமாற்றக்கொள்கையையும் தேசிய கல்விக் கொள்கையையும் எந்த விதமான அரசியல் கலப்பும் இல்லாமல் உடனடியாக நடைமுறைப்படுத்த கல்வி அதிகாரிகள் முன்வர வேண்டும். இல்லையெனில், எங்களுடைய கல்விச் சமூகம் எதிர்காலத்தில் வீதிக்கு இறங்கி போராடுவதை யாராலும் தடுக்க முடியால் போய்விடும் என்று எமது நிதர்சன செய்திப் பிரிவுக்குத் தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் புயல்நேசன் தெரிவித்தார்.

அத்துடன், மடு வலயத்தில், இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் ம.நிஜகரன் அவரின் வழிகாட்டலில் சங்கத்தில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இணைவு. இது ஒரு வரலாற்றுச் சாதனை.(05)



## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதற்கான சூழலையும் ஏற்படுத்தும். ஜனநாயகத்தினை மதித்துமக்களின்வாக்குரிமைகளை மதித்து இந்தத் தேர்தல் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிடப்படும் திகதியில் குறிப்பிடப்படும் காலத்தில் நடத்தப்பட வேண்டும். என ஒட்டுமொத்த மக்களும் விரும்புகின்றனர். தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்தி வைப்பதைவிடுத்துமக்களைமதித்து இந்தத்தேர்தல்நடத்தப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்---- என்றார்.

## கடன்மறுசீரமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 10 வருடங்களுக்கான இணக்கப்பாட்டை எட்டுவதே இதன் பொருளாகும். ஆனால்தற்போதைய ஆளும் தரப்பும் ஆகக் கூடியது இன்னும் 6 மாதங்கள் மாத்திரமே ஆட்சியிலிருக்கும். எனவே இதில் ஆளும் தரப்புக்கு அப்பால், எதிர்க்கட்சியின்நிலைப்பாடுகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும்என்பது எமது நிலைப்பாடாகும்.

உதாரணத்துக்கு மே மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் பின்னர், சஜித் பிரேமதாச ஜனாதிபதியானால் அவரும் அந்த ஒப்பந்தத்துக்கமையவே செயற்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் நாம் மீண்டும்வங்குரோத்தடைந்தநாடாகி விடுவோம். எவ்வாறிருப்பினும் மீண்டுமொருமுறை கடன் மறுசீரமைப்பினை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் இலங்கைக்கு இல்லை.

சில அரசியல் கட்சிகள் இது தொடர்பான புரிதல் இன்றி தவறான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றன. மக்களை ஏமாற்றுவதற்கும் எல்லையொன்று உள்ளது. கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாகும். எனவே எந்தளவு விரைவாக கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகின்றதோ, அந்தளவுக்கு சாதகமான விளைவுகள் முழுநாட்டு மக்களுக்கும் ஏற்படும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அடிப்படையாகக் கொண்டே கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள முடியும் என்று கடன் வழங்குனர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் தற்போது நாம் எதிர்பார்ப்பதைவிட பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகமாகக் காணப்பட்டால், அந்த வளர்ச்சியின் அதிக பங்கு தமக்கு வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகின்றனர்.

எமது பொருளாதார வளர்ச்சி வேகத் துக்கமைய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு ஆளும்தரப்புஇணங்கியுள்ளதாகவே தெரிகிறது. அது முழுமையாக அவ்வாறு இடம்பெறத் தேவையில்லை என்று நாம் எண்ணுகின்றோம். கடன் மறுசீரமைப்பில் பொருளாதார வளர்ச்சி வேகம் ஓரளவு தாக்கம் செலுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் நூறு வீதம் தாக்கம் செலுத்தினால் அது எமக்கு எதிர்மறையான தாக்கத்தை அதிகரிக்கும்.

இன்னும் 6 மாதங்களே தற்போதைய ஆளும் தரப்பு ஆட்சியில் இருக்கும் என்பதால், எட்டப்படும் இணக்கப்பாடுகளில் வெளிப்படைத் தன்மையைப் பேணுமாறு வலியுறுத்துகின்றோம். சர்வதேசக்கடன்களில்ராஜபக்சக்கள் பெருமளவில்மோசடிசெய்துள்ளனர். 8டிரில்லியன்கடன்காணப்படுகிறது. ஆனால் சொத்து மதிப்பு 2 டிரில்லியனாகும். ராஜபக்ஷர்களால் கொள்ளையிடப்பட்ட ஒவ்வொரு டொலரும் எமது ஆட்சியில் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும். எனவே பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றுவதற்கு நாம் தயாராக இல்லை. யதார்த்தத்தை நாம் தொடர்ந்தும் மக்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருப்போம் - என்றார்.

## பனைமட்டைகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். அதன் காரணமாகவே தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளனர் என்று கல்முனை வாழ் தமிழ் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்குமுறைகளையும்கண்டித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது என்பதாலும் ஆளும்தரப்பு இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரவேண்டும் என்பதாலும், தீர்வு கிட்டும்வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் 2019 ஆண்டும் மக்கள் பட்டினிப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். பலஅரசியல்வாதிகள், பிரமுகர்களின் வாக்குறுதிகளை அடுத்து அந்தப் போராட்டம்பின்னர்கைவிடப்பட்டது. ஆனால் வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

மக்களின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக கல்-முனை சுபத்திராம விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவர் ஸ்ரீஸ்ரீ க.கு.சச்சிதானந்தம் சிவம் குரு, கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சா.சந்திரசேகரம் ராஜன், அழகக்கோன் விஜயரத்னம், ஐக்கிய வணிகர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணப்பிள்ளை லிங்கேஸ்வரன் ஆகியோரும் அதில் பங்கேற்றிருந்தனர்.

## தமிழ்ப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌடபாதர் சத்தியம் அல்லது உண்மைபற்றிஒன்றைக்கூறினார். அதாவதுஉண்மைஎன்பதுஆயிரம் முரண்பாடுகளையும் தன்னுள் அடக்கும் தன்மை வாய்ந்தது என்றார். தமிழ் மக்கள் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் ஈடுபடுத்துவது மற்றைய முரண்பட்ட கருத்துக்களைத் தன்னுள் அடக்கும் தன்மை வாய்ந்ததாகும்!

அதெப்படி?

பொது வேட்பாளர் ஒருவரைத் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தல் களத்தில்இறக்கினால்அதுஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதாகும். ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்ற முன்வந்திருக்கும் சிங்கள வேட்பாளர்களுக்குவாக்களிக்காமல் இருப்பது பகிஷ்கரிப்புதானே!

ஆனால் தமிழ் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்து சிங்கள வேட்பாளர்களைப் புறக்கணிப்பது சிங்கள வேட்பாளர்களை ஆதரிக்கும் எமது தமிழ் மக்கள் தவறான வழிகளில் சிங்கள வேட்பாளர்களுக்குவாக்களிப்பதைக் கட்டுப்படுத்திபகிஷ்கரிப்புபலமடைய வழிவகுக்கும். பகிஷ்கரித்தால் தேர்தல் வாக்கு நிலையங்களில் என்னநடக்கின்றதென்பதைநாங்கள் அறியாமல் இருக்கச் செய்துவிடும். பொதுவேட்பாளர் ஒருவரை முன்நிறுத்தினால் அவரின் தேர்தல் முகவர்கள் தாம் பகிஷ்கரிக்கும் வேட்பாளர்களுக்குத் தவறான வழிகளில் வாக்களிப்பதை நிறுத்தி பகிஷ்கரிப்பைவலுவாக்க உதவுவர். நாம் தேர்தலை வெறுமனே பகிஷ்கரித்தோமானால் தம்பி கஜேந்திரகுமாரின் வாக்கையும் என் வாக்கையும் யாரோ சிலர் தமக்கு சாதமாக சிங்கள வேட்பாளர்களுக்காகப் பாவிக்க வழிவகுத்துவிடும். ஆகவே பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்குதமிழ்மக்கள்அனைவரும் வாக்களிப்பது. பகிஷ்கரிப்பதின் வெற்றியை உணர்த்தும் உச்சக் கட்டமாகக் கொள்ளலாம்.

அடுத்து சிங்கள வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குத் தமிழ் மக்கள் வாக்களிப்பதே சிறந்தது என்ற வாதம். தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது என்பது தகுதியுடைய சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்காது விடுதல் என்றுஅர்த்தமாகாது. ஆனால்சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வெறுமனே வாக்களித்துவிட்டு பின்னர் கடந்த 70 வருடங்களுக்கு மேலாக நாம் ஏமாற்றப்பட்டவாறு நடக்காது இருப்பதற்குதமிழ்பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது கூடிய வலுவுள்ளதாக அமையும். அதாவது சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வாக்களியுங்கள் என்று கூறுபவர்கள் குறித்த சிங்கள வேட்பாளரிடம் இருந்து எந்தவித வாக்குறுதிகளையும்பெறாதுவெறும் நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கு வாக்களிக்கக் கூறுவதாகும். சம்பந்தன் செய்த தவறு அதுதான்.

சிங்கள அரசியல்வாதிகளை நாம் நம்புவோம், முஸ்லீம் அரசியல்வாதிகளைநாம்நம்புவோம் என்று 'பண்பாளர் அரசியல்' (றூளஜமியிளதுளஜ ஊணலியிஷ்-மிஷ்உவி) அவர் செய்யக்போய் இருவராலும் ஏமாற்றப்பட்டார். அவரது 91வது வயதில் நான் அவரைத் தாக்குகின்றேன் என்று எவரும் என்னுடன் குறைப்பட்டுக் கொள்ளக்கூடாது. சம்பந்தன் 'பண்பாளர் அரசியலில்' ஈடுபட்டமை அவரின் பெருந்தன்மையையும் சூதற்ற மனோநிலையையும் வெளிக்காட்டுகின்றது. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே. திருகோணமலையையும் இலங்கையின் கிழக்கையும் நாம் இழந்து இன்று பரிதவிப்பதற்குக் காரணம்இந்த'பண்பாளர்அரசியலே'. பெரும்பான்மைத் தமிழர்கள் சிறுபான்மையினமுதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கவிட்டோம். அவர் தமது மக்களுக்கு சார்பாக நடந்து கொண்டார். நாம் பாதிக்கப்பட்டோம்.

நல்லாட்சி காலத்தில் சிங்கள அரசியல்வாதிகளுடன் சேர்ந்து அரசியல் நடத்தினால் அதுவும் 'பண்பாளர் அரசியல்' நடத்தினால் தாம் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைகளுக்கு சிங்கள அரசியல்வாதிகள்செவிசாய்ப்பார்கள் என்று சம்பந்தன் ஆணித்தரமாக நம்பினார். ஆனால் அது நடைபெறவில்லை.

ஒருமுறை இராமகிருஷ்ண பரமஹம்சர் நதியில் குளித்துக் கொண்டிருக்கும் போது ஒரு விஷ ஜந்து தண்ணீரில் மிதந்து வந்தது. அதனை அவர் தன்கைகளால் எடுத்து கரை சேர்ப்பித்தார். உடனே அது அவரின் கைகளைக் கடித்துவிட்டது. அதனால் அவர் தன்னுடைய கைகளை உதற அந்த ஜந்து திரும்பவும் தண்ணீரில் விழுந்துவிட்டது. திரும்பவும் அவர் அந்த ஜந்தை தன் கைகளால் வாரி எடுத்து கரை சேர்ப்பித்தார்.

அப்பொழுது அருகில் இருந்தவர் பரமஹம்சரிடம் "அந்த விஷ ஜந்து உங்களைக் கொட்டும் என்று தெரிந்து கொண்டு ஏன் திரும்பவும் அதனைக் காப்பாற்றினீர்கள்" என்று கேட்டார். "கொட்டுவது அதன் குணம்; கருணை காட்டுவது மனித குணம்" என்றார் பரமஹம்சர்.

'பண்பாளர் அரசியல்' அது போன்றதே. சம்பந்தனை நான் குறை சொல்லவில்லை. அவர் பண்பாளராக நடந்து கொண்டார். ஆனால் நடந்ததோ நாம் தமிழர்கள் யாவரும் கொட்டப்பட்டுவிட்டோம். விஷ ஜந்துக்கள் தமது குணத்தைக் காட்டிவிட்டன. ஆகவே பொது வேட்பாளரை முன்னிறுத்தினால் நாம் சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேச முடியும் என்பதை நாம் மறத்தலாகாது. எங்களின் கால்சட்டைப் பைகளை நிரப்பும் பேரம் அல்ல. தமிழ் மக்கள் சார்பான பேரம்! (அதனால்த்தான் பொது வேட்பாளராக நேர்மை நிறைந்த ஒருவரை முன்னிறுத்துவது அவசியம்.) தமிழ் பொது வேட்பாளர், மற்றைய சிங்கள வேட்பாளர்கள் சம்மதம் தெரிவிக்கும் தீர்வுகளைப் பரிசீலித்துப் பார்த்து யார் கூடிய நன்மைகளைப்பெற்றுத்தருவாரோ அவருக்கு விருப்பு வாக்கொன்றை வழங்க முன்வரலாம். அதாவது தமிழ் வேட்பாளருக்கு முதல் விருப்பு வாக்கு. சிங்கள வேட்பாளருள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முன்வருபவருக்கு அடுத்த விருப்பு வாக்கு. ஆனால் இங்கு 'பண்பாளர் அரசியலுக்கு' இடமில்லை. தமிழர்களுக்கு தக்க தீர்வைத் தர முன்வருபவர்கள் வெளிப்படையாகஇதைச்செய்வேன் என்று வெளிநாட்டு இராஜதந்திரிகள் மூன்று பேர் முன்னிலையில் கையெழுத்திட்டுஆவணம்ஒன்றைத் தரவேண்டும். வாய்மொழி மூல உத்தரவாதங்களை நாம் ஏற்க முடியாது. எமக்கு எழுத்தில் இட்டு அதன் பிரகாரம் தீர்வுகளைத் தரமுடியாதவர்கள், தாம் வென்ற பின் எதனையுந் தருவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் மூவருமே அல்லது அத்தனை சிங்களவேட்பாளர்களுமேஎழுத்தில் தர முடியாது என்று கூறினால் தான்தோன்றித்தனமாக ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதே சிறந்தது என்று கூறுபவர்கள் தமது கூற்றின் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் வாக்களிப்பதால் அவர்கள் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஏதாவது உதவி வேண்டும் என்றால் அதைச் செய்து தருவார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுத் தரமாட்டார்கள் என்பது அவர்கள் எழுத்தில் உத்தரவாதங்களைத் தர மறுப்பதில் இருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். ஆகவே குறித்த ஒருவருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறுபவர்களும் அவர்களின் தேர்வான சிங்கள வேட்பாளரின் உண்மைத்தன்மையைதமிழ்பொது வேட்பாளரை முன்னிறுத்துவதால் புரிந்து கொள்ளலாம். நாம் அவர்களிடம் கோர வேண்டிய கோரிக்கைகள் பின்வருமாறு-

1. வடக்குகிழக்கில்தமிழ்மொழி 3000 வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது.

2. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின்பாரம்பரியவாழ்விடங்கள்

3. அவர்கள் சர்வதேச உடன்படிக்கைகளின் அடிப்படையில் உள்ளார்ந்த சுயாட்சியைபெற தகுதியுடைய வர்கள்.

4. அவர்கள் ஒரு கூட்டு சமஷ்டி அரசியல் யாப்பைப் பெற உரித்துடையவர்கள்.

5. ஒற்றையாட்சி அரசியல் யாப்பை நீக்கி ஒரு கூட்டு சமஷ்டி அரசியல் யாப்பை இலங்கை நாடு ஏற்றுக் கொள்ள சம்மதிக்க வேண்டும்.

அடுத்து இனக்கலவரம் வெடிக்கும் என்ற பயம். பகிஷ்கரித்தால்அதுவெடிக்கக்கூடும் என்ற பயம். யாராவது ஒருவரை நாம்தேர்ந்தெடுத்துஅவருக்குவாக்களித்தால்மற்றையவேட்பாளர்களின் ஆதரவாளர்களுடன் நாம் முரண்டுபிடிக்க நேரிடலாம். அதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால்பொதுவேட்பாளர்ஒருவரை நிறுத்துவதால் அவ்வாறான கலகங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. நாங்கள் தெளிவாகக் கூறுவோம் - எந்த சிங்கள வேட்பாளர் தமிழர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய முன் வருவாரோ அவருக்கு விருப்பு வாக்கொன்றை அளிப்போம் என்று.

அதையும் மீறி மீண்டும் ஒரு இனக் கலவரம் வர வாய்ப்பே இல்லை. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை அதற்கு இடங்கொடுக்காது. வட கிழக்கில் இராணுவத்தினர் தவறாக நடந்து கொண்டால் அதுவே வெளிநாடுகளில் எமது போராட்டத்திற்கு அனுசரணையாளர்களைப் பெற்றுத்தர வல்லது என்பது எனது அனுமானம். தற்போதைய பொருளாதார நிலை இனக் கலவரங்களை ஏற்படுத்த இடங்கொடுக்காது. அத்துடன் உயிர்த்த ஞாயிறின் பின்னர் சிங்கள இளைஞர் யுவதிகள் எவ்வாறு சிங்கள அரசியல்வாதிகள் இனத்தையும் மதத்தையும் பாவித்து இதுகாறும் அரசியல் நடத்தி வந்துள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டுள்ளார்கள். இனக்கலவரங்களுக்கு அவர்கள் இடம்கொடுக்கமாட்டார்கள். மேலும் 'அரகலய' அவர்களிடையே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

எனவே பொது வேட்பாளரை நிறுத்துவதே சிறந்த வழி. எல்லோரதும் எதிர்பார்ப்புக்களையும் அது பூர்த்தி செய்யும் - என்றுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# போதைப்பொருள் கடத்தல்; சந்தேகநபர்களை பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க உத்தரவு

சுமார் 380 கோடி ரூபா பெறுமதியான 263 கிலோ கிராம் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் 10 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவில் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை வெளிக்கொணரும் வகையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், சந்தேக நபர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்திருந்தனர். (05)

# சுற்றுலாப் பயணிகளை அச்சுறுத்தி பணம் பெற்றவர் கொழும்பில் கைது

கொழும்பு, புதுக்கடை பகுதிக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அச்சுறுத்தி அவர்களிடமிருந்து அதிகளவிலான பணத்தை பெற்றதாகக் கூறப்படும் நபரொருவர் வாழைத்தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் துன்புறுத்தல் ,அச்சுறுத்தல் மற்றும் தடுத்தல் உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கொழும்பு புதுக்கடை உணவகம் ஒன்றைச் சேர்ந்தவர் எனவும் சந்தேக நபர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# நச்சுத் தன்மைமிக்க போதைபொருள் சுற்றிவளைப்புகளின்போது மாட்டின

## 505 பேரும் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத் தன்மைமிக்க போதைப்பொருள்களுடன் 505 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 5 பெண்களும் அடங்குவர்.

இந்நிலையில், திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் 508 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 25 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் என ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (05)

# சம்மாந்துறை ஊடக மையத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையில் சமூக ஊடக ஆர்வலர்கள் ஒன்றிணைந்த சம்மாந்துறை ஊடகம் மையத்தின் மாதாந்த ஒன்றுகூடல் ஊடக மையத்தின் தலைவர் ஏ.பி.இம்ரானின் தலைமையில் சம்மாந்துறை ஊடக மையத்தின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஊடக மையத்தின் பதில் செயலாளர் ஐ.எல்.எம்.நாஸிம் கருத்து தெரிவிக்கையில் -

சம்மாந்துறையில் 51 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஆர்வமாகவுள்ள இள சமூக ஊடக ஆர்வலர்களையும் ஒன்றிணைத்து அவர்களுக்கு முறையாக ஊடக கற்கை நெறிகளையும் வழிகாட்டல்களையும் வழங்க சம்மாந்துறை ஊடக மையம் தயாராக உள்ளது.

அதுமட்டுமின்றி சம்மாந்துறையில் பல ஊடகவியலாளர்கள் வாழ்ந்த அடையாளங்கள் இல்லாமலும் பல சாதனையாளர்கள் கௌரவிக்கப் படாமலும் உள்ளதோடு இலங்கையின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட ஒருவர் சம்மாந்துறையை சேர்ந்தவர் என்பதில் இதில் எத்தனை பேருக்கு தெரியும்? சம்மாந்துறையின் பல புராதன நினைவுகளும் கவனிப்பார் அற்றுக் கிடக்கின்றது.

எதிர்கால சந்ததியினருக்கு நாம் என்ன செய்து இருக்கின்றோம். எமது அமைப்பில் ஊடகவியலாளர்கள், வடிவமைப்பாளர் என பலர் உள்ள நாம் ஒன்றிணைந்து இவை அனைத்தையும் ஆவணப்படுத்த வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

சம்மாந்துறை ஊடக மையத்தின் ஆலோசகர்களாக சம்மாந்துறையைச் சேர்ந்த மூன்று சமூக சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்நிகழ்வில் ஊடக மையத்தின் தலைவர் ஏ.பி. இம்ரான் மற்றும் அங்கத்துவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

# ஐ.எம்.ஏ. சங்க கராத்தே மாணவர்கள் வவுனியா மாவட்ட போட்டியில் வெற்றி

## வட மாகாண போட்டிக்கும் தெரிவு







(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டுத்துறை அமைச்சின் 48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிக்கான வவுனியா மாவட்ட கராத்தே போட்டி அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

இதில் சென்பாய் பீ.மிதுசான் தலைமையிலான வவுனியா ஐ.எம்.ஏ. சங்கத்தை சேர்ந்த மாணவர்கள் காட்டா, டீம் காட்டா மற்றும் குமிதே ஆகிய நிகழ்சிகளில் போட்டியிட்டு வெற்றிபெற்று வடமாகான கராத்தே போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (05)

# சாரதி உறங்கியமையினால் கிணற்றில் வீழ்ந்தது ஓட்டோ

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர்

பொல்கஹவெல - ஹொதெல்ல பிரதேசத்தில் பயணித்த ஓட்;டோ ஒன்று கிணற்றில் வீழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த தாய் , தந்தை , பாட்டி மற்றும் 4 பிள்ளைகள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவின் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனபொலிஸார் சந்தேகிக்கின்றனர்.(05)

# வைத்தியசாலை காவலாளிகள் மீது தாக்குதல் ஒருவர் காயம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா பொது வைத்தியசாலையின் காவலாளிகள் மீது இளைஞர் குழு ஒன்று திங்கட்கிழமை இரவு தாக்குதல் மேற்கொண்டதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் வைத்தியசாலையில் நோயாளி ஒருவரைப் பார்வையிடுவதற்காக இளைஞர்கள் குழு ஒன்று வருகை தந்துள்ளது.

இதன்போது கடமையிலிருந்த காவலாளிகளுக்கும் அவர்களுக்கும் இடையில் வாய்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அது கைகலப்பாக மாறியது.

சம்பவத்தில் தாக்குதலுக்கிலக்கான காவலாளி ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையின் விபத்து பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் தப்பிச்சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# போலி 5 ஆயிரம் ரூபா நோட்டுக்களை எடுத்து பொலிஸிடம் ஒப்படைத்த நபர்

ஒரே இலக்கம் கொண்ட நான்கு போலி 5,000 ரூபா நோட்டுக்களைக் கண்டெடுத்த ஒருவர் அதனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார் எனத் தொடங்கொட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடங்கொட புஹுபுகொட பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் புத்தாண்டை முன்னிட்டு இடம்பெற்ற சூதாட்ட மைதானத்தில் வைத்து இந்தப் பணத்தைக் கண்டெடுத்ததாகக் கூறி தம்மிடம் ஒப்படைத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.போலி நாணயத்தாள்களை ஒப்படைத்த நபர் தமக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இவற்றை வைத்திருந்தவரை அடையாளம் காண்பதற்காக மேலதிக விசாரணைகள் முன்னெடுக் கப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# மாபெரும் கலாசார விளையாட்டு விழா

## காரைதீவில் ஏற்பாடு

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின்41ஆவதுவருடநிறைவை முன்னிட்டும், குரோதி புத்தாண்டு வருட பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தாசனசமூகநிலையமும் இணைந்து நடத்தும் 26 ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதிஸ்ரீ சனிக்கிழமைகாரைதீவில்நடைபெற இருக்கிறது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் றொட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற இருக்கும் கலாசார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்.

சீர்பெறு அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளரும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளருமான எந்திரிஎன்.சிவலிங்கம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் , கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களப்பணிப்பாளர்சிவராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்கள்.

முதன்மைஅதிதியாககாரைதீவு பிரதேச செயலாளர்

சிவ.ஜெகராஜன்மற்றும்ஏனைய சிறப்புநட்சத்திர கௌரவ அதிதிகள் பலரும்கலந்துசிறப்பிக்கின்றார்கள்.

இந்த நிகழ்விலே விசேடமாக காரைதீவு விளையாட்டுகழகத்தின் 40 வருடகால வரலாற்றை உள்ளடக்கிய'விபுலவிருட்சம்'என்ற சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படஇருக்கின்றது. அத்துடன் கல்வித்துறைசாதனையாளர்களும் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள் என்றுகழகசெயலாளர்எஸ்.கிரிசாந்த் தெரிவித்தார். (05)

# இளம் குடும்பஸ்தரை வவுனியாவில் காணோம்

*வவுனியா வேப்பங்குளம் மெதடிஸ்ட் தேவாலய வீதியில் தற்காலிகமாக வசித்து வந்த இளம்தம்பதிகளில்கணவனை கடந்த 12 ஆம் திகதி முதல் காணவில்லைனமனைவியால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*பதிவு திருமணம் செய்து ஒரு மாதகாலமான நிலையில் குறித்த இளம் குடும்பத்தினர் தற்காலிகமாக மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து வந்த நிலையில், கடந்த 12 ஆம் திகதி மனைவியை அவரது பணித்தளத்தில் இறக்கிவிட்டு தான் தனது பணிக்குசெல்வதாககூறிவிட்டு சென்றவர்மீண்டும்வரவில்லை எனமனைவி தெரிவித்துள்ளார்.*

*25 வயதுடைய வில்வராசா ரக்சன் என்பவரே காணாமல் போனவராவார்குறித்தநபரை அடையாளம் காண்பவர்கள் 0741822912 குறித்த தொலைபேசிஇலக்கத்திற்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அறிவிக்குமாறு மனைவி கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இது தொடர்பான விசாரணைகளைநெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)*



# வலிகாமம் வயாவிளான் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இ.போ.ச. பஸ் சேவை






வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் ஏற்பாட்டில் வலிகாமம் வயாவிளான் திக்கம்புரை டெயிலர் கடை சக்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்கான புதிய பஸ் சேவையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இப்பிரதேச மக்கள் போக்குவரத்து பிரச்சினை சம்பந்தமாக அமைச்சரின் கவனத்திற்கு அண்மையில் கொண்டு வந்திருந்தனர்.

இந்த பஸ் சேவை வயாவிளான் சுதந்திரபுரம், வயாவிளான் மத்திய கல்லூரி, ஈழகேசரி, பொன்னையா வீதி ,குரும்பசிட்டி, கட்டுவான் சந்தி ஊடாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை அடைந்து காங்கேசன்துறை வீதியினூடாக யாழ்ப்பாண மாநகரத்தை அடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து நகை, மோட்டார் சைக்கிள் கொள்ளை!

வவுனியா நகரில் மோட்டார் சைக்கில் சென்றவர்களை வழிமறித்து அவர்களின் குழந்தையின் கழுத்தில் கத்திவைத்துதாயாரைமிரட்டிநகைகள் பறித்தமையுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிலையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சிட்டு அலுவலகத்திற்கு செல்லும் வீதியில் நேற்று (புதன்கிழமை) அதிகாலை இடம்பெற்றது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

குறித்த பெண்மணி கடவுச்சீட்டு காரியாலத்திற்கு முன்பாக விண்ணப் பப்படிவம் நிரப்பும் தொழிலில் ஈடுபட்டு வருபவர் ஆவார். அவர் நேற்று அதிகாலை தனது தொழில் நிமித்தம் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் தனது குழந்தையுடன் சென்றார்.

இவ்வாறு சென்று கொண்டிருந்த வேளை வீதியில் மறைந்து நின்ற முகமூடியணித்த மூவர் குறித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்துமிரட்டி அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபரித்தமையுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துக்கொண்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

# கிழக்கில் நூற்றாண்டை நோக்கி பயணிக்கும் இராம கிருஷ்ணமிசன்!

## அம்பாறையில் சேவை விஸ்தரிப்பு




(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கிலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் ஆரம்பித்து 98 ஆண்டுகளை பூர்த்தி செய்து 100 ஆண்டுகளை நோக்கி ஜீவ சேவையுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பொறுப்பேற்ற பிற்பாடு கிழக்கு எங்கும் பலவகையான மக்கள் மைய நலன்புரி வேலைத் திட்டங்கள் முன்னொரு போது மில்லாத வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்திலும் காரைதீவை மையமாக வைத்து பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கு முன்னோடியாக காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் சாரதா நலன்புரி நிலையத்தில் புதிதாக காரைதீவு மையமாகக் கொண்டு இலவச மருத்துவ சேவைகளும், நடமாடும் கிராமிய மருத்துவ சேவைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பிரதி திங்கட்கிழமை புதன்கிழமை மற்றும் வெள்ளிக் கிழமை தோறும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை இம் மருத்துவசேவை இடம் பெற்று வருகின்றது.

அங்கு மருத்துவ ஆலோசனைகள் அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் தொற்றா நோய் பற்றிய விழிப்புணர்வு தற்கொலை தடுப்பு ஆலோசனைகள் போதைப்பொருள் தடுப்பு ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் இலவசமாக மருத்துவ முகாம்களை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தெரிவித்தார்.

அத்தோடு யோக பயிற்சிகள்,இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு நோக்கமாகக் கொண்ட கணினி பயிற்சிகள், தியான வகுப்புகள், செவ்வாய்க்கிழமை தோறும் சத்சங்க வகுப்புகள் ஆகிய ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான உள அபிவிருத்தி தொடர்பான செயல் நிகழ்வுகளும் தொடர்ச்சியாக நடைபெற உள்ளது என்று சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் மேலும் தெரிவித்தார்.(05)

# மனிதநேயம் மறைந்துவிட்டது கே.ஆர்.எம்.றிசாட் அனுதாபம்



(இல்சாத் பர்வீஸ்

மனிதநேயம் கொண்ட மனிதரை - இன்று நாம் இழந்துள்ளோம். மனித நேயம் மறைந்துவிட்டது என நாடாளுமன்ற உறுப்பினரின் நாடாளுமன்ற விவகார உத்தியோகத்தரும்,சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் நிர்வாக உறுப்பினரும், சட்டக் கல்லூரி மாணவன் கே.ஆர்.எம். றிசாட் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தேவரப்பெருமவின் திடீர் மரணச் செய்தி - நாட்டுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகுமென்றும் தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் - முஸ்லிம் சமூகத்தோடு அடங்காத அன்பு செலுத்திய அவரிடம்-கிஞ்சித்தும் இனவாதம் இருந்ததில்லை.

கொரோனா காலத்தில் அவரது சேவை இந்த நாட்டையே திரும்பி பார்க்க வைத்தது. அவரது பணி காலத்தால் என்றும் அழியாதது.

மனிதநேயம் என்ற வார்த்தை இருக்கும் வரை பாலித தேவரப்பெரும என்ற நாமமும் நிச்சயம் உயிர்வாழும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அவரது மறைவால் துயருற்றிருக் கும் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை எத்தி வைக்கிறேன். - என்றுள்ளது.

(05)

# நாஸாவில் பணியாற்றிய புத்தளத்தைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி மஹ்ரூப் ரொஸ்மின் மறைவு



(சியாஜ்)

புத்தளம் நகரை சேர்ந்தவரும், அமெரிக்கா நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடமை புரிந்து வந்தவருமான இளம்விஞ்ஞானி மஹ்ரூப்ரொஸ்மின் (38 வயது) செவ்வாய்க்கிழமை புத்தளத்தில் காலமானார்.

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான இவர் வானியற்புவியியல் துறையில் தேர்ச்சி பெற்றவர் என்பதுடன் அமெரிக்கா நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடமை புரிந்தும் வந்தவர்.

திடீர் சுகவீனமடைந்த நிலையில் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்த இவரின் ஜனாஸா செவ்வாய்க்கிழமை மாலை 04 மணிக்கு புத்தளம் பகா பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரின் நல்லடக்கத்தில் பெருந்திரளானோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# 35 ஆடுகளைக் களவாடியவர் கைது ; காவலாளி வைத்தியசாலையில் சேர்ப்பு

புதுக்குடியிருப்பு மல்லிகைதீவு பகுதியில் ஆட்டு காவலாளிகளை தாக்கிவிட்டு ஆடுகளை களவாடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரம், மல்லிகைதீவு பகுதியில் ஆட்டு மந்தையில் இருவர் காவல் கடமையில் இருந்த போது திடீரென வந்திறங்கிய குழுவினர் ஆடுகளை களவாடி செல்ல காவல் கடமையில் இருந்த இருவரையும் தாக்கிவிட்டு 9 லட்சத்தி முப்பத்தைந்தாயிரம் ரூபா பெறுமதியான 35 ஆடுகளை கொண்டு சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான இருவரில் ஒருவர் 55 வயதுடைய நபர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தெரியப்படுத் தியதையடுத்து சந்தேகத்தின் பேரில் வற்றாப்பளை பகுதியை சேர்ந்த 32 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் 15 ஆடுகள் மீட்கப்பட்டு, ஆடுகளை கடத்தி செல்ல பயன்படுத்திய வொலிரோ கப்ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையில் உப பொலிஸ் பரிட்சகர் தென்னக்கோன், பொலிஸ் சார்ஜன் குணவர்த்தன, பொலிஸ் கொஸ்தாபல்களான பிஜரத்ன, மதுரங்க, பிரதீபன், அருஸ், டினுக்சன், ரவிராஜ், லக்சான், பொலிஸ் கொஸ்தாபள் சாரதி அபயக்கோன் ஆகிய பொலிஸ் குழுவினர் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்று விசாரணைகளை முன்னெடுத்து வருவதோடு விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.04.2024இல் வெளியிடப்பெற்றது